REGD. No. M. 6311

PHONE No. [illegible]

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 158

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 30உ செவ்வாய் (15—12—53) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 1உ புதன் (16—12—53)

"தோழர்களின் துயர் துடைப்போம்"

"'இருளும்—ஒளியும்'—சர்க்காருக்கு ஏற்ற பதிலாகும்!"

காஞ்சி நிதி நாடகத்தில் பொதுச் செயலாளர்

காஞ்சீபுரம், டிச. 15—

"தூத்துக்குடித் தோழர்கள் மீது வீசப்பட்டிருக்கும் சதிவழக்கின்விபரங்களைப் பார்க்கும்போது, பயங்கரமாயிருக்கிறது. அவர்களை வழக்கிலிருந்து மீட்டு, நம்மோடு உலவும்படிச் செய்யும் நீங்காக் கடமை நம்மைச் சேர்ந்ததாகும்."

என்று, 12—12—53 அன்று காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீசில் நடைபெற்ற "இருளும் ஒளியும்" என்ற நாடகத்துக்கு தலைமை வகித்த பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

நாடக — நடிகர்களைப் பாராட்டி பொதுச் செயலாளர் மேலும் பேசும்போது, "திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டின் நலனையே முக்கிய நோக்காகக் கொண்டது; அதனாலேயே அதன் பக்கம் நின்று, பார்ப்பனத் தோழர்களும் ஒத்துழைக்க முன்வருகிறார்கள். இந்த நாடகத்தை நடத்தித்தர முன்வந்த தோழர் எஸ். வி. சகஸ்ரநாமம், தூத்துக்குடி நிதிக்காக இந்த உதவியைச் செய்ய முன்வந்தது, குறிப்பிடத் தக்கது. ஏனெனில், தூத்துக்குடி கழகத் தோழர்கள் மீது வீசப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளில் குறிப்பிடக் கூடியது—அவர்கள், பார்ப்பனர் வீடுகளைத் தாக்கினர் என்பதாம். அரசாங்கத்தின் இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்த நாடகமே ஒரு பதிலாகும்," என்று குறிப்பிட்டார்.

மேற்படி நாடகத்தில் நடிகச் செல்வர்களான சிவாஜி கணேசன், எஸ் வி. சகஸ்ரநாமம், முத்துகிருஷ்ணன், எம். என். ராஜம், மைனுவதி ஆகியோர் கலந்துகொண்டனர். நாடகம் நகர தி. மு. க. தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடகத்தின் முடிவில் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக ரூ 750, பொதுச்செயலாளர் அவர்களிடம் மாவட்டச் செயலாளர் தோழர் சி வி. எம் அண்ணுமலை, காஞ்சி நகரத்தின் பங்காக அளித்தார். செலவு போக மிஞ்சிய தொகை ரூ 545-13-0-வும், காஞ்சி நகரக் கழகத்துக்கென பொருளாளர் ஆர். பாபு வசம் ஒப்படைக்கப்பட்டது. நகரக் கழகத்தின் சார்பிலுள்ள, கடன்கள் நீக்கி, மீதியுறும் தொகை டவுன் பாங்கியில், நகரக் கழகத்தின் சார்பில் கட்டப்பெறும்.

குறிப்பு:— தூத்துக்குடி நிதிக்கென வழங்கப்பட்ட ரூ 750-ஐயும், பொதுச் செயலாளர் அண்ணுதுரை, செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணுமலை வசம் அளித்துள்ளார். தோழர் அண்ணுமலை, செங்கற்பட்டு மாவட்டச் சார்பில், தூத்துக்குடி நிதிக்காக ரூ 2000 தருவதாகப் பொதுச் செயலாளரிடம், உறுதி தந்துள்ளார்.

பிரிந்துபோன ஆந்திரம்

திரு.—கொச்சிக்கு உணவளிக்கிறது!

கர்நூல், டிச. 14—

இந்த ஆண்டு அறுவடையிலிருந்து, ஆந்திரம், திரு—கொச்சி அரசாங்கத்துக்கு 1 லட்சம் டன் அரிசி கொடுக்க இருப்பதாக, அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

ஆந்திரத்திலிருந்து திரு.—கொச்சிக்கு இந்த ஆண்டு 32,000 டன் ஒதுக்கப்பட்டது. இதில், 21,800 டன் அரிசி அனுப்புவதற்கு சம்பந்தப்பட்ட உத்தரவு வெளியாகிவிட்டதாகவும், மேற்கொண்டும் 12,000 டன் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

புதுப்பிக்கப்படிருக்கும் உணவுத் திட்டத்தின்கீழ், திரு—கொச்சி ராஜ்யத்திற்கு அரிசி விநியோகிப்பதில், ஆந்திரமே பிரதான அங்கம் வகிக்கும்.

காந்தியார் சிலையைத் திறந்துவைக்க அண்ணுதுரைக்கு அழைப்பு

திருவொற்றியூர் பஞ்சாயத்து போர்டு தீர்மானம்

சென்னை, டிச. 14—

காந்தியார் சிலையைத் திறந்து வைக்க, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களை அழைப்பதென ஒரு வோட்டு மெஜாரிட்டியில் திருவொற்றியூர் பஞ்சாயத்து போர்டு தீர்மானம் நிறைவேற்றியது.

குன்று சரிந்து ஏழுபேர் இறந்தனர்

பம்பாய், டிச. 14—

இங்கிருந்து 12 மைல் தூரத்தில் உள்ள செம்பூர் அருகே, இன்று பிற்பகல் ஒரு குன்றின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததால் 7 பேர் புதையுண்டு மாண்டனர். 8 பேர் காயமடைந்தனர். மாண்டவர்களில் இருவர் பெண்கள்.

கோபுரக் கலசங்கள் களவாடப்பட்டன

காவேரிப்பாக்கம், டிச. 14—

இங்கிருந்து 8 மைல்களுக்கப்பால் இருக்கும் பனப்பாக்கத்தில் நடராஜா கோவிலில் இம் மாதம் 9-ம் தேதி சிலர் புகுந்து ரூ 500 பெறத்தக்க கோபுர கலசத்தையும் திருடிச் சென்றனர். ஆனால் அந்தக் கலசம் வெறும் முலாம் பூச்சு என்று சொல்லப்படுகிறது.

சட்டசபையில் 'கல்லக்குடி' பிரச்னை: தட்டிக் கழிக்கிறார் ஆச்சாரியார்!

மந்திரி மாணிக்கவேலருக்கு ஏ. கோவிந்தசாமியின் அறைகூவல்!

சென்னை, டிச. 14—

"தி. மு. கழக மாநாடுகளிலும், பொதுக்கூட்டங்களிலும், திருச்சி மாவட்ட நகராண்மைக் கழகங்களிலும், 'டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்றுக' என்று, தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருந்தும், பொதுமக்களின் மனுக்கள் கிடைக்கப் பெற்றும், சர்க்கார் எந்தவித பதிலும் எழுதாமல் மவுனம் சாதித்தது ஏன்? இதுதான் ஜனநாயகமா? தாலூகா ஆபீஸ், ரிஜிஸ்திரார் ஆபீஸ் இவற்றின் குறிப்பேடுகளில் 'கல்லக்குடி' என்றே, இருப்பதால், ரயில் நிலையத்தின் பெயரையும், தபால் நிலையத்தின் பெயரையும் 'கல்லக்குடி' என்று மாற்றுமாறு மத்திய அரசாங்கத்திற்கு. சென்னை மாநில அரசாங்கம் ஏன் சிபாரிசு செய்யக் கூடாது? வேண்டுமானால், (Alight here for Dalmia factory) 'டால்மியா தொழிற்சாலைக்கு இங்கே இறங்குக' என்று போட்டுக்கொள்ளலாம்,' என்று சென்னை அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு ஏன் எடுத்துக் கூறியிருக்கக் கூடாது?" என்று நேற்று சென்னை சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது தி. மு. கழகத் தலைமை நிலையப் பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. கேட்ட கேள்விகளுக்கு, திணறிப்போன அமைச்சர் மாணிக்கவேலர் பதிலளிக்கையில், 'பொறுத்திருந்து பாருங்கள்' என்று, அரையும் குறையுமாக பதில் சொல்லிவிட்டு அமர்ந்தார்.

"தி. மு. கழக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு வெற்றிபெற்ற அமைச்சர், தி. மு கழகத்தைப் பற்றிய செய்திகளில், மௌனமாக இருப்பது நியாயமா, கோர்மையா?" என்று அடுத்த ஒரு நேரடியான கேள்வியை தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., கேட்டார். இக்கேள்விக்கு மந்திரி மாணிக்கவேலர், நெற்றியைச் சுளித்தாரே பதில் ஏதும் கூறாமல் மவுனமாக இருந்துவிட்டார்.

"'டால்மியாபுரம்' என்ற பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றுமாறு கோரி, திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுவிடமிருந்தும் திருச்சி ஜில்லாவில் உள்ள பஞ்சாயத்து போர்டுகளிடமிருந்தும் அரசாங்கத்திற்குத் தீர்மானங்கள் வந்தனவா? அது விஷயத்தில் அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளனர்?"

என்று கல்லக்குடி வட்டாரத்தைச் சேர்ந்த தோழர் எம். பழனிபாண்டி கேட்டார்.

இதற்கு ரெவின்யூ மந்திரி மாணிக்கவேலர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"ரயில்வே நிலையத்தின் பெயரையும், தபால் நிலையத்தின் பெயரையும் கல்லக்குடி என்று மாற்றுமாறு கோரி தீர்மானங்கள் வந்தன; இது இந்திய சர்க்கார் அதிகாரத்திலுள்ள விஷயம்; இதுபற்றி எவ்வித தாக்கீதும் வரவில்லை."

பி. ராமமூர்த்தி:— "காலாடிப் பேட்டை, பார்பர்ஸ் பிரிட்ஜ், வாஷர்மேன் பேட்டை போன்ற வெள்ளையர் பெயர்உள்ள ஊர்ப் பெயர்களை ஏன் மாற்றியமைக்கக் கூடாது?"

மு. மந்திரி:- "நம் நாட்டு கவுரவத்தைப் பாதிக்கும் வகையில் ஊர்ப் பெயர்கள் இருக்கலாகாதென்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது; ஆனால் இது விரிவாக ஆராய்ந்து முடிவு செய்யவேண்டிய விஷயம் சில ஊர்களின் பெயர்கள் சரித்திர சம்பந்தம் கொண்டவை; சிலருடைய சேவைகளைப்போற்றுவதற்காக வேறு சில பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; இதை நன்முகப் பரிசீலனை செய்து, புதுப் பெயர்கள், மக்களுக்குப் பழக்கமாகும்படி செய்யப்பட வேண்டும்; உதாரணமாக ஜார்ஜ் டவுன் என்று உள்ளது. இம் மாதிரி பல பெயர்கள் உள்ளன; இப்பெயர்கள் மக்களுக்குப் பழக்கமாகிவிட்டதால் இவைகளை மாற்றுவது கஷ்டம்; இந்தப் பிரச்னையைப் பூரணமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமேதவிர, கட்சி அரசியலுடன் இதைக் கலந்து விடக் கூடாது."

தோழர். கோவிந்தசாமி:— 'ஜார்ஜ் டவுன் என்பதை மாற்றுவது கஷ்டமென்றால், லைஜ ஜா' என்று எல்லோருக்கும் பழக்கமாய் இருந்த தெருப் பெயரை, 'நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு,' என்று மாற்றியதேன்?

முதல் மந்திரி:—"ரயில்வே நிலையத்தின் பெயரை மாற்ற வேண்டுமென்பதே பிரச்னை; ரெவின்யூ கிராமத்தின் பெயரைப் பற்றித்தான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது; எப்போதும் போலவே, அந்தக் கிராமத்தின் பெயர் கல்லக்குடியாகவே இருந்து வருகிறது; ரயில்வே நிலையத்தின் பெயர் சம்பந்தப்பட்ட வரையில சமீபத்தில், இதைப் பற்றிய பழைய ரிகார்டுகளைப்புரட்டிப் பார்த்தேன். 1936-ம் ஆண்டில், இந்த ரயில்வே நிலையம் கட்டப்பட்டபோது, பெயரிடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஜில்லா அதிகாரிகளையும், கிராம மக்களையும் கலந்தாலோசித்த பிறகே 'டால்மியாபுரம்' என்று ரயில்வே அதிகாரிகள் பெயரிட்டனர்; வேறு ஒரு பெயர் சிபார்சு செய்யப்பட்டபோதும், கிராமவாசிகள், டால்மியாபுரம் என்ற பெயரையே உசிதமாகக் கருதினர். அவ்வாறு கோரி மனு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—12—1953 செவ்வாய்

மொழி ஏகாதிபத்தியமும் முதலாளிகள் ஒத்துழைப்பும்

மொழி வழி மாகாணங்கள் அமைய வேண்டும் என்பதற்கு முதலில் அடி கோலியதும், ஆதரவளித்ததும் காங்கிரஸ் மகாசபைதான். அதனுடைய அடிப்படைக் கொள்கைகளை விளக்குவன என்று கருதப்பட்ட காரச்சி தீர்மானங்களில் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும். "அன்னியராட்சியில் நாட்டு மொழிகளுக்கு ஆக்கம் தரப்படவில்லை. பிரித்தாளும் முயற்சியில் இந்தியா பலவகையாகச் சேர்க்கப்பட்டும், பிரிக்கப்பட்டும் இருக்கிறது. சுதந்திர இந்தியாவில் மாகாணங்கள் எல்லாம் மொழி அடிப்படையில் பிரிக்கப்படும்" என்று காங்கிரஸ் தலைவர்கள் முழங்கினார்கள், சுதந்திரப் போராட்ட காலத்தில்.

அவ்வாறு செய்த தீர்மானங்கள், வாக்குறுதிகள், வீர முழக்கங்கள் எல்லாம், சுதந்திரக் கிளர்ச்சியில் மக்களை ஈடுபடுத்துவதற்கு மட்டுமே பயன்பட்டன. பின், இந்தியா விடுதலையடைந்தது. பாகப் பிரிவினை நடந்தது, பாகிஸ்தான் வேறாகி, மிகுந்த இந்தியாவில் காங்கிரஸ் கட்சியினர் அதிகாரத்தில் வைக்கப்பட்டபொழுது, மொழி வழி மாகாணங்கள் பற்றிய தீர்மானங்கள் மறக்கடிக்கப்பட்டன. நாட்டு மொழிகளுக்கு ஆக்கந்தர வேண்டுமெனப் போராடிய காங்கிரசே, நாட்டு மொழிகளை பின்னுக்குத் தள்ளி, இலக்கிய—இலக்கண வளமில்லாத இந்தி ஒன்றினை மட்டும் ஏத்தித் தொழ ஆரம்பித்தது.

சுதந்திரக் கிளர்ச்சியின்போது, மொழிவழி மாகாணங்களைப் பற்றி காங்கிரஸ் பேசியது, ஆனால் சுதந்திர இந்தியாவில் இந்தி ஏகாதிபத்தியத்தை வளர்த்தது. மொழிவழி மாகாணங்களைப் பற்றிய தீர்மானங்கள் மறக்கடிக்கப்பட்டது மட்டுமல்ல, காங்கிரஸ் தலைவர்களே இப்பொழுது "மொழி வழி மாகாணங்கள் அமைவது கூடாது, அதை வற்புறுத்துவோர் நாட்டுத் துரோகிகள், ஒற்றுமை விரோதிகள்" என்று கூவிட ஆரம்பித்துவிட்டனர். ஆந்திர மாகாணம் ஒன்றுதான்—அதுவும் பெரும் போராட்டத்துக்குப்பின், அங்கு அடக்க முடியாத பெரும் குழப்பமும், கிளர்ச்சியும் தலைதூக்கியபின் தரப்பட்டது; தரப்பட்டதுகூட அல்ல, ஆந்திரர்களால் வலுக்கட்டாயமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆந்திரப் பிரிவினையைத் துவக்க வந்த நேரு பண்டிதர்கூட, இனி மொழிவழி மாகாணங்கள் பிரிவதை தாம் அனுமதிக்கப் போவதில்லையென்றும், எனவே மொழிவழி மாகாணங்களுக்கு காங்கிரஸ்காரர்கள் ஆதரவளிக்கக்கூடாது என்றும் கூறிச் சென்றார்.

முன்பு மொழிவழி மாகாணங்கள் வேண்டுமென்று கூறியவர்களே, இப்பொழுது கூடாது என்கிறார்கள். மிக வேடிக்கையான வரலாறு! இத்தகைய மாறுதலுக்குக் காரணம்தான் என்ன?

மொழிவழி மாகாணக் கிளர்ச்சியிலும், அதன் அமைப்பிலும், வடநாட்டுத் தலைவர்கள் புதியதொரு ஆபத்தைக் கண்டனர். மொழிவழி மாகாணங்கள் உண்டானால், மத்திய அரசாங்கத்தின் பிடி தளர்வதுடன், மொழி அடிப்படையின் உரிமையும் நாட்டுப் பற்றும் வளர்வதையும் கண்டனர். மேலும் அவர்கள் விரும்பி, இந்தியா முழுமையும் இந்திமயமாக்கும் முயற்சிக்கு பேரெதிர்ப்பாக மொழிவழி அரசுகள் இருக்குமென்பதையும் தெரிந்துகொண்டனர். இந்த நிலை, முன்பு அவர்கள் மொழிவழி மாகாணங்கள் பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றிய பொழுதும், ஆதரித்துப் பேசியபொழுதும் எதிர்பாராத ஒன்று.

வடநாட்டு அரசியல் ஏகாதிபத்தியம் இந்தியா முழுவதையும் கட்டி ஆளவேண்டும் என்றால் வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியமும் கூட வளர்க்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை, வடநாட்டு அரசியல் தலைவர்களும், டில்லி ஆதிபத்தியத்தினரும் உணர்ந்தனர்.

அதுமட்டுமல்ல வடநாட்டு முதலாளித்துவத்துக்கும், ஒரே ஏகாதிபத்தியத்தின்கீழ் இந்திய உபகண்டத்தின் பல்வேறு பகுதிகள் கட்டுண்டு கிடப்பது லாபகரமாகிறது. அப்பொழுதுதான், ஒரே இந்தியா என்ற கட்டுப்பாட்டுக்குள் வடநாட்டு முதலாளிகளால் சுலபமாகச் சுரண்டிப் பிழைக்க முடிகிறது. இந்த ஏகாதிபத்தியப் பிடி தளர்ந்து, வேறுபட்ட இனங்களும், மாறுபட்ட மொழிவகைகளும் தனி உரிமையடைந்தால் அவர்களுடைய கொள்ளைலாப வேட்டையில் மண்விழுந்துவிடுகிறது.

எனவே, இந்தி ஏகாதிபத்தியம் வளர்ந்து, இந்தி கலாசாரம் பெருகி, இந்தியா பூராவும் அதனுள் அடங்கிவிட வேண்டுமென்பதற்காக, மூன்று கூட்டத்தினரும்—டில்லி அரசியல் அதிபர்கள், வடநாட்டுக் கலாசாரப் பிரியர்கள், வடநாட்டு முதலாளிகள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கின்றனர். இத்தகைய முயற்சி—மாபெரும் சதிச்செயல் வடநாட்டில் நடைபெற்று வருகிறது.

மொழிவழி மாகாணங்கள் இனி அமையக்கூடாது, அத்தகைய கிளர்ச்சிகளை எதிர்த்துப் போராட, பம்பாயில் ஒரு கமிட்டி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாம் மேலே கூறிய குற்றச்சாட்டு—வடநாட்டு அரசியல்—கலாசாரம்—முதலாளித்வம் ஆகிய மூன்றும் அமைத்திடும் எதிர்ப்பு என்பது அந்தக் கமிட்டியில் முக்கிய பங்கெடுத்துக்கொள்பவர்களைக் கவனித்தால் நன்கு விளங்கும். பம்பாயில் கூட்டப்பட்டுள்ள மொழிவாரி அமைப்பை எதிர்க்கும் கமிட்டிக்கு, முக்கிய வழிகாட்டியாக இருப்பவர், பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவரும், வடநாட்டு காங்கிரஸ் தலைவர்களில் பலருடைய பிணைப்பைக வலிவு பெற்று விளங்குபவருமான எஸ். கே. பாடீல் ஆவார். அந்தக் கமிட்டியில் முக்கிய பங்கு கொள்பவர்களில் முதலில் இருப்பவர் ஜே. ஆர். டி. டாடா ஆவார். வடநாட்டில் இருக்கும் மிகப் பெரும் கோடீசுவரர், ஆசியாவிலேயே மிகப்பெரிய இரும்பு தளவாட தொழிற்சாலையான டாடா கம்பெனியின் அதிபர், பம்பாயில் பலவித் துறைகளில் முதலாளிகளாக விளங்கிடும் மோடி, தாகூர் தாஸ் போன்றவர்கள் அதில் கலந்துள்ளனர்.

இவ்வாறு மற்ற மொழிகளும், கலாசாரங்களும் உரிமைக் குரல் எழுப்புவதைத் தடுக்க, வடநாட்டில் காங்கிரஸ் அரசியல் தலைவர்களும், டாடா போன்ற முதலாளிகளும் ஒன்று கூடுகின்றனர். வடநாட்டு ஆதிக்கத்திற்குப் புறம்பான—மாறுபட்ட எந்த இனத்தையோ, கலாசாரத்தையோ, மொழியையோ தலையெடுக்கவொட்டாமல் தடுத்திட அந்த முயலுகின்றனர். வெளிப்படையாக கமிட்டிகள் கூட்டுகின்றனர்; பலம் திரட்டுகின்றனர்.

இங்கு இருப்பவர்களோ "இந்திய தேசிய மொழி! இந்தியா ஒரே இனம்; ஒரே கலாசாரம்! பால்லியா சுரண்டினாலும், டாடா சுரண்டினாலும் பாதகமில்லை; அவர்களும் இந்தியர்களே!" என, தென்னாட்டை வடநாட்டுக்கு அடிமைப்படுத்தும் வகையிலேயே நடந்துகொள்கின்றனர்!

பாண்டியனார் அறநெறி!

—:X:—

நம்பிக்கையின்மை என்று கூறலாமா என ஒருவர் நினைத்தார் — அறிந்த மாவீரர் பதவியைத் துறந்தார்!

சீறிப் போரிட்ட சிங்கம் எங்கே? சிறுபுதர் தேடும் இந்த நரி எங்கே?

★

"ஜஸ்டிஸ் கட்சியின் வழித் தோன்றல் சவுந்திர பாண்டியனார், மதுரை ஜில்லா போர்டிலே இருந்தபோது, அவரை எதிர்க்க, அசைக்க ஒருவருமில்லை; அந்தச் சமயத்தில் மாவட்டக் குழுவினர் 32 பேரில், ஒரே ஒருவர் சொன்னார்—'பாண்டியனார் மீது நம்பிக்கையில்லை'—என்று! இப்படித் தீர்மானம் கூட நிறைவேற்றப்படவில்லை; 31 பேர் ஆதரவிருந்தும், ஒருவர் சொன்னார் என்ற காரணத்திற்காக மானத்திலே அக்கறை கொண்ட நமது பாண்டியனார், உடனே பதவியை ராஜினாமா செய்தார்? சீறிப் போரிட்ட சிங்கமெங்கே? சிறுபுதர் தேடும் இந்த நரி எங்கே?"

"'போ! போ!' என்று கூற போவதாகமாட்டேன்', என்று பதவியிலே ஒட்டிக் கொண்டு, கவர்னரின் மாளிகைக்கு ஓடிக் கொண்டிருந்தார்கள் என்று, ஒரு ஜஸ்டிஸ் கட்சி மந்திரியை பாவது விரல் விட்டுக் கூற முடியுமா? ஒரே ஒரு மந்திரியை அவர்கள், குறிப்பிட்டுச் சொல்லட்டும்—தி. மு. கழகத்தைக் கலைத்து விடுகிறேன். கூற முடியுமா, அவர்களால்! எனவே தான் கூறுகிறோம்—அந்த 'காடாண்ட' பாம்பரையினன் நாங்கள்! அவசரப் படாதே, 'ஆளுவதற்கு வருகிறோம்!'"

—கே. ஏ. மதியழகன் வரவேற்பு (சேலம்) கூட்டத்தில் தோழர் அண்ணாதுரை.

தோழர் கோவிந்தன் விடுதலையானார்

கடலூர், டிச. 11—

ரயில் நிறுத்த போராட்டத்தில் பங்கு கொண்ட குரப்பப்பேட்டை கன்னாவடி தோழர் கோவிந்தனுக்கு 6 வாரக் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை முடிந்து தோழர் இன்று விடுதலையானார். புதுப்பாளையம் தி.மு.கழகம், கடலூர் ஓ.டி. தி.மு.கழகச் செயலாளர், திருப்பாதிருப்புலியூர் தி. மு. கழகத் தோழர்கள், நண்பர்கள் ஆகியோர் சிறைவாயிலில் மலர்மாலை அணிவித்து அவரை வரவேற்றார்கள்.

திருப்பாதிருப்புலியூர் தி. மு. கழகக் கட்டிடத்தில், புதுப்பாளையம் தி. மு. கழகச் செயலாளர் தலைமையில் தோழர் கோவிந்தனுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இராமச்சந்திரன், ஏ. எஸ். இராமச்சந்திரன், புலவர் வாணன், சரவணன், தம்பிதுரை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

தன்னை வரவேற்று, பாராட்டியவர்கள் அனைவருக்கும் தோழர் கோவிந்தன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

பெரம்பூர் ரயில்வண்டிகள் தயாரிப்பு தொழிற்சாலை

ரூ 2 கோடி மதிப்புள்ள இயந்திரங்கள் வரவழைக்கப்படும்

சென்னை, டிச. 15—

பெரம்பூர் ரயில் வண்டிகள் (கோச்) தயாரிப்பு தொழிற்சாலைக்கு ரூ 2 கோடி மதிப்புள்ள இயந்திரங்கள், இதர தயாரிப்பு சாதனங்களை வரவழைக்க இந்திய சர்க்கார் ரயில்வே போக்குவரத்து இலாகா தீர்மானித்திருக்கிறது.

மிகவும் முக்கியமான இயந்திரங்கள் மட்டுமே அயல் நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் என்றும், மற்றவை இந்நாட்டில் செய்தவைகளையே உபயோகிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

பாகிஸ்தானுக்கு ரஷ்ய உதவி

கராச்சி, டிச. 15—

அமெரிக்காவைப் பெற்றுக்கொண்டு, பதிலாக, பாகிஸ்தானுக்குத் தேவையானவைகளை ரஷ்யா கொடுக்க முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

பள்ளியில் பயிலுவோர்

"ஆண் பெண் சிறுவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒன்றரைத்தான் இருக்கிறது. இவர்களில் பள்ளியில் படிப்பவர் சராசரி வருமாறு:- தொடக்கப் பள்ளியில் ஆண், 2, பெண் 1; உயர்நிலைப் பள்ளியில் ஆண் 3, பெண் 1; கல்லூரியில் ஆண் 7, பெண் 1. இம்மாநிலத்தில் பெண்களுக்காக 11 கல்லூரிகள் உள்ளன."

—திருவாட்டி ஓ. சி. சீனிவாசன் கல்வித்துறை தலைவியார்.

தெரிந்து கொள்ளுங்கள்

புதுடில்லி, டிச. 15—

1. சென்ற பருவத்தில், இந்தியா முழுவதிலும், சுமார் இரண்டு லட்சம் ஏக்கராவில் ஜப்பானிய சாகுபடி முறை கையாளப்பட்டது; இதில், 61,800 ஏக்கரா மேற்கு வங்காளத்தில் இருந்தன.
2. ஐந்து வருஷத் திட்ட காலத்தில், தேசிய விஸ்தரிப்பு வேலைகளுக்காக மொத்தம் சுமார் 101.6 கோடி ரூபாய் செலவிடப்படும்; இந்தத் தொகையில் மத்திய சர்க்காரின் பங்கு சுமார் 68 3 கோடி ரூபாயும், ராஜ்ய சர்க்கார்களின் பங்கு சுமார் 33 3 கோடி ரூபாயுமாக இருக்கும்.
3. இந்திய ரப்பர் தொழிலில், இதுவரை மொத்தம் சுமார் 13 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.
4. சென்ற வருஷத்தில், இந்திய தபால் தந்தி இலாகாவிற்கு, தந்திப் போக்குவரத்துக்கள் மூலம் சுமார் 56 கோடி ரூபாய் கிடைத்துள்ளது.
5. 1953 செப்டெம்பர் 30-ந் தேதியுடன் இந்தியா முழுவதிலும் வசூலாகாமல் பாக்கி நின்ற வருமானவரித்தொகை, (சூப்பர்-வரி, அதிக லாப வரி, வர்த்தக லாபவரி ஆகிய வரிகள் உட்பட) மொத்தம் 184 கோடி ரூபாய்க்கு அதிகமாகும்.
6. சென்ற ஆண்டில், 5,600 லட்சம் கெஜம் மில் துணியும், 650 லட்சம் கெஜம் கைத்தறித் துணியும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.
7. இந்திய ரெயில்வேக்களுக்குச் சொந்தமாக 15 அச்சகங்கள் உள்ளன; இந்தியாவிலே அதிகமான அச்சகங்கள் சொந்தமாயுள்ள ஸ்தாபனங்களில் இதுவும் ஒன்றாகும்.
8. கிழக்கு பாகிஸ்தான், மேற்கு பாகிஸ்தான் எல்லைப் பிரதேசங்களில் இந்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள கள்ளக் கடத்தல் தடுப்பு நிலையங்கள் 1952-53ல், கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட சுமார் 14 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சாக்குகளை பறிமுதல் செய்துள்ளன.
9. சர்க்கார் உதவி பெற்று நடத்தப்படும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், மத்திய சர்க்கார், சுமார் 1 33 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்திருக்கின்றது.
10. இந்திய தங்கச் சுரங்கங்களில், சுமார் 24 000 பேர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

பிறப்பு

ஆடுதுறை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. ராமையா அவர்கள் துணைவியார் தோழியர் சித்திரவடிவு அம்மையார் 8—12—53-ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

மேலும் ஐந்து பேர் சாட்சியம்

திருநெல்வேலி, டிச. 11—

ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகர அய்யர் முன்பு தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை இன்று மீண்டும் எடுத்துக் கொள்ளப் பட்டது.

25-வது சாட்சி

பிராசிகியூஷன் தரப்பில் 25-வது சாட்சியாக வி. சுப்பிரமணிய ஐயர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் ஒரு வக்கீல்; புதுக் கிராமத்தில் வசிப்பவன்; கூட்டுறவு ஸ்டோர்ஸ் டைரக்டராகவும் இருந்து வருகிறேன். ஜூலை 15ந் தேதியன்று காலை, அருணாசலக் கோனார் என்னிடம் வந்தார்; இருபது முதல் முப்பது வரை அடங்கிய ஒரு கூட்டம் மேலூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு புதுக் கிராமத்தை நோக்கி வந்துகொண்டிருப்பதாக அவர் என்னிடம் கூறினார்; ஸ்டோர்சுக்குப் போய் முன் ஜாக்கிரதையாக ஏற்பாடுகள் செய்யும்படி நான் அவரைக் கேட்டுக் கொண்டேன்; அவர் போன சில நிமிஷங்களில் வடக்கேயிருந்து இருபது பேர் கொண்ட ஒரு கூட்டம் வந்தது; கூட்டத்தினரிடம் கழிகளும் விறகுக் கட்டைகளும் இருந்தன; வீடுகளின் முன்புறக் கதவுகளை உடைத்துக் கொண்டே வந்தனர் கூட்டத்தினர்; அவர்கள் தெற்கு நோக்கிச் சென்றனர்; ஒரு மணி நேரத்துக்குப் பிறகு இன்னொரு கூட்டம் கூச்சலிட்டுக் கொண்டு, கற்களை எறிந்து கொண்டும் வந்தது; இவர்களிடம் தடிகள் இருந்தன; நான் என்னுடைய வீட்டின் முன்புறத்திலுள்ள இரும்புக்கம்பிகளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தேன்; "ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறீர்கள்?" என்று நான் கூட்டத்தினரைப் பார்த்து கேட்டேன்; 'எங்களைச் சேர்ந்தவர்களில் ஏழு பேரை போலீசார் சுட்டு விட்டனர்' என்றார் ஒருவர்; பின்னால் நின்று கொண்டிருந்த மற்றொருவர் முன்னுக்கு வந்து, 'என்னையா பேசுறே நீ' என்று சொல்லிக்கொண்டே என மீது கல்லை விட்டெறிந்தார்; கல் வீட்டுக் கதவு மீது பட்டது; என்னுடைய வீட்டு வாசலில் இருந்த பெயர்ப் பலகையை கூட்டத்தினர் இரண்டு துண்டாக உடைத்து விட்டனர்; பிறகு கூட்டம் அந்த இடத்தை விட்டுச் சென்றது; இதற்கு ஒரு மணி நேரம் கழிந்து நானும், வக்கீல் கணேசய்யரும் சுப்பையா வித்தியாலய பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கூடத்திற்குப் போனோம்; எங்களுடைய பெண்கள் இந்தப் பள்ளிக்கூடங்களில் படித்து வருகிறார்கள்; அவர்கள் பத்திரமாக இருக்க வேண்டுமே என்பதே எங்களுடைய கவலை; பிற்பாடு நாங்கள் வீடுகளுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறதென்பதை தெரிந்து கொள்ளுவதற்காக புதுக் கிராமத்தைச் சுற்றிப் பார்த்தோம்."

"அன்று நான் பார்த்தவர்களில், இன்று, யார் இருக்கிறார்கள் என்று அடையாளம் கண்டு பிடிக்க என்னால் முடியவில்லை; என் மீது கல்லை எறிந்தவர் யார் என்றும், அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை; பெயர்ப் பலகையை உடைத்தவரையும் தெரியவில்லை; அன்று சேதப்படுத்தப் பட்ட எல்லா வீடுகளும் பிராமணர்களுடையதல்ல; அந்தத் தெருவில் இதர ஜாதியினரும் வசித்து வருகிறார்கள்; அவர்களுடைய வீடுகள் தவிர, பாக்கி எல்லா வீடுகளும் சேதமாக்கப் பட்டன."

திரு எம். செல்லையப்ப பிள்ளையினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, சாட்சி கூறியதாவது:—

"சம்பவம் நடந்த ஒரு வாரத்துக்குள் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; இன்ஸ்பெக்டர் விசாரித்ததற்கு முன்பாக நான் போலீசாரிடம் போய் புகார் செய்யவில்லை; சில தினங்களுக்குப் பிறகு, என்னை, சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். யாரையும் நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை."

திரு. பி. ஏ. தங்கசாமியினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

"என்னுடைய தெருவில் ஒரு சாடார் கடை இருக்கிறது; இந்தக் கடை தாக்கப்படவில்லை; கடைக்கு இரண்டு பக்கங்களிலும் பிராமணர்களுடைய வீடுகள் இருக்கிறது; அந்த வீடுகள் தாக்கப்பட்டன."

26-வது சாட்சி

பிராசிகியூஷன் தரப்பில் 26-வது சாட்சியாக ஏ. பி. கணேசய்யர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் புதுக் கிராமத்தில் வசிக்கும் ஒரு வக்கீல்; ஜூலை 15-ந் தேதி காலை 9-15 மணி சுமாருக்கு கைகளில் தடிகளுடன் சுமார் இருபது பேர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தைப் பார்த்தேன்; அவர்கள் வீடுகளின் கதவுகளை உடைத்துக் கொண்டிருந்தனர்: சுமார் 10 மணிக்கு கைகளில் தடிகளுடன் இன்னொரு கூட்டம் வந்து என்னுடைய நாற்காலியின் மீது கற்களை விட்டெறிந்தது. பெயர்ப் பலகையைச் சேதப்படுத்தியது; சிறிது நேரத்துக்குப் பிறகு என்னுடைய குழந்தைகள் சௌக்கியமாக இருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ளுவதற்காக 25-வது சாட்சியும், நானும், சுப்பையா வித்யாலயத்துக்குப் போனோம்."

கூட்டத்திலிருந்தவர்களில் யாரையும் சாட்சியினால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

திரு. செல்லையப்ப பிள்ளையினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

"நடந்த விஷயத்தைப் பற்றி நான் சப்-கலெக்டருக்கு ரிப்போர்ட் செய்தேன்."

27-வது சாட்சி

27-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட நாராயண ஐயங்கார் கூறியதாவது:—

"நான் புதுக் கிராமத்தில் வசிக்கிறேன்; என்னுடைய வீடு மேற்கு பார்த்தாற்போலிருக்கிறது; ஜூலை 15-ந் தேதி காலை சுமார் 10 மணிக்கு ஒரு கூட்டம் வந்து என வீட்டு காம்பவுண்டு சுவரின் கதவை உடைத்தது; கூட்டத்தினர் என் வீட்டிற்குள் நுழைய முயற்சித்தனர்; வாசலில் உள்ள இரும்புக் கம்பிகளை வளைக்க அவர்கள் முயன்றார்கள்; சிலர் என் வீட்டிற்குள் நுழைந்து, சில படங்களை உடைத்தனர்; முன்புற ஹாலில் இருந்த சில சாமான்களைக் கலைத்தனர்; என்னிடம், மத சம்பந்தமான சில புத்தகங்களும் மேஜைமீது ஒரு பட்டு அங்கவஸ்திரமும் இருந்தது; அவற்றை அவர்கள் எடுத்துச் சென்றனர்; மறுதினம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வந்து என்னை விசாரித்தார்; போலீசார் தயாரித்த மகஜரில் நான் கையெழுத்திட்டேன்."

தம்முடைய வீட்டில் சேதம் விளைவித்தவர்களை சாட்சியினால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. சேதமுற்ற சில சாமான்களை அவர் அடையாளம் கண்டு பிடித்தார்.

திரு. எம். செல்லையப்ப பிள்ளையினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

"போலீசார் தயாரித்த அத்தாட்சியில் நான் கையெழுத்திட்டேன்; போலீசாருடன் சிலர் இருந்தனர்; ஆனால் அவர்கள் போலீஸ் உடுப்பில் இல்லை; அவர்களில் யாரையும் எனக்குத் தெரியாது; அத்தாட்சியில் எனக்கு முன்பாக யாரும் கையெழுத்திடவில்லை."

28-வது சாட்சி

28-வது சாட்சியாக வேங்கடேசய்யர் விசாரிக்கப்பட்டபோது கூறியதாவது:—

"பஸ் ஸ்டாண்டுக்கு அருகே உள்ள அபிராமி விலாஸ் காப்பி ஓட்டல் சொந்தக்காரன் நான்; ஜூலை 15-ந் தேதி காலை 9-15 மணிக்கு என் ஓட்டலுக்கு முன்பாக சுமார் முப்பது பேர் அடங்கிய ஒரு கூட்டம் வந்தது; அக்கூட்டம், ஓட்டல் மீது கற்களை எறிந்தது; ஸ்டால் கண்ணாடிகளில் சில உடைக்கப்பட்டன; மர சைக்கிள் ஸ்டாண்டு ஒன்றையும் அவர்கள் உடைத்துவிட்டனர்; போர்டு மீதிருந்த மின்சார பல்பையும் உடைத்தனர்; இரண்டு நாட்களுக்குப் பிறகு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார். அன்று கூட்டத்திலிருந்தவர்களில் யாரையும் இப்போது நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை."

29-வது சாட்சி

திரு. பெரியசாமி. 29-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"தூத்துக்குடி கிரேட் காட்டன் ரோட்டில் உள்ள அரசன் அண்டு கம்பெனியில் நான் ஒரு குமாஸ்தா; ஜூலை 15-ந் தேதி நான் ஆபிசில் இருந்தேன்; இரண்டு மூன்று பேர்கள் ஆபீஸ் பக்கமாகச் சென்றனர்; அப்போது ஆபீஸ் மீது இரண்டு கற்கள் விழுந்தன; ஷோ ரூம் கண்ணாடி உடைக்கப்பட்டது; கம்பெனி மானேஜரும் இருந்தார்; கற்களை எறிந்தவர்களை நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை; ஒரு வாரத்துக்குப் பிறகு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

திரு பி. ஏ. தங்கசாமியினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

"கம்பெனி கூட்டாளிகளெல்லாம் நாடார்கள்; எல்லா வகுப்பினரும் சிப்பந்திகளாக வேலை செய்கின்றனர்."

இத்துடன் இன்றைய விசாரணை முடிந்தது.

சட்ட சபையில்...

சென்னை, டிச 14

இன்று சென்னை சட்டசபை. துவங்கியிருக்கிறது ஆந்திரா பிரிவினைக்குப் பின், சபை கூடுவது இதுதான் முதல் தடவையாகும். இப்போதைய மொத்த உறுப்பினர்கள் 231 பேர்;— அதில் காங்கிரஸ் 117; திராவிட பார்லிமெண்டரி கட்சி 36; பொதுவுடைமை 21; உழைப்பாளி கட்சி 17; பிரஜா - சோஷலிஸ்டு 15; காமன்வீல் கட்சி 6; முஸ்லீம் லீக் 5; கே. எம். பி. 4; பார்வர்ட்பிளாக் 3; நீதிக்கட்சி 1; இருஷிகர் லோக் 1; ஷெட்யூல் 1.

குடியாத்தம் ஜெனரல் ரிசர்வ் தொகுதி ஸ்தானங்கள் காலியாக உள்ளன.

★★★★★★★★★★★★

கடலூரில் திராவிடர் திருநாள்!

19—11—53 அன்று, கடலூர் நகர தி.மு கழகக் கிளைகளின் கூட்டம் நடைபெற்றது. அது போது, இவ்வாண்டு பொங்கலை திராவிடர் திருநாளாக மிகப் பெரிய அளவில் கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது.

தோழர்கள் அண்ணாதுரை, மு கருணாநிதி, நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், ஏ கோவிந்தசாமி, எம் எல். ஏ., ஆகியோர் பங்கு கொள்ளுவார்கள்.

தோழர் இரெ. இளம்வழுதி, எம் ஏ. பி எல், விழாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பந்தயம், சொற்பொழிவுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளும், ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தலும் நடைபெறும்.

மாலை மிகப்பெரிய ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெறும்.

திராவிடர் திருநாள் கொண்டாட தனிக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

★★★★★★★★★★★★

நிதி நாடகம்

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக, பூந்தவல்லி, கலையாண் சாவடி திறந்த வெளி அரங்கில், 19—12—53-ல் தோழர் அண்ணாதுரை தலைமையில், எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கும் 'திருமணம்' என்ற நாடகமும், 20—12—53-ல், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி நடிக்கும் "ஜமீன் மாளிகை" என்ற நாடகமும் நடைபெறும்.

வேலாயுதம் படிப்பகம் ஆண்டு விழா

18—12—53ல், இடைப்பாடி வேலாயுதம் படிப்பகம் ஆண்டு விழா நடைபெற இருக்கிறது. தோழர் சி. பி. சிற்றரசு, ஈரோடு அப்பாவு ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவர்.

கோபி அருகே பயங்கரக் கொள்ளை

கோபி, டிச 11—

இங்கிருந்து 4 மைல் தூரத்திலுள்ள கோபி – சத்தியமங்கலம் சாலையிலுள்ள தோட்டத்தின் மத்தியிலுள்ள சென்னி என்பவர் வீட்டிற்குள் 9-ந் தேதி நள்ளிரவில் ஆயுதபாணிகளாக 50 பேரடங்கிய கொள்ளைக் கூட்டம், ரிவால்வர், வேல்கம்பு, தடிகளுடன் நுழைந்து தோழர் சென்னியை கட்டிவைத்துவிட்டு, அங்கிருந்த பெண்கள் அணிந்திருந்த தங்க நகைகளையும், ரூ 3,000 ரொக்கத்தையும், இரண்டு பெட்டி வேட்டிகளையும் எடுத்துச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது.

கொள்ளைக் கூட்டத்தினரை எதிர்த்துத் தாக்க ஓடிவந்த பண்ணையாட்களும் கொள்ளைக் கூட்டத்தினரால் தாக்கப்பட்டனர்.

கருணாநிதிக்கு வரவேற்பும் பாராட்டும்

அண்ணாமலை நகர், டிச. 12—

தோழர் மு. கருணாநிதிக்கு 10—12—53ல், சிதம்பரம் தி. மு. கழகத்தில் தோழர் தில்லைவில்லாளன் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

தோழர் கருணாநிதி, ராஜா அண்ணாமலை டவுன் ஹாலுக்கு காரில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். சுற்றுவட்டாரத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகளின் சார்பாக அவருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. புவனகிரி தி. மு. கழகத்தோழர்கள் மலர்க் குடை ஒன்று அவருக்கு அளித்து வரவேற்றார்கள்.

தோழர்கள் சொக்கலிங்கம், பாலகுருசாமி பேசியபின், தோழர் கருணாநிதி வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்.

★

மதுரை

மதுரை, டிச. 13—

தோழர் கருணாநிதி அவர்கள் இன்று காலை தூத்துக்குடி எக்ஸ்பிரசில் மதுரை வந்து சேர்ந்தார். ரயில் நிலையத்தில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

★

பூந்தோட்டம்

திருவாஞ்சியம், டிச. 13—

நன்னிலம் தாலுக்கா பூந்தோட்டத்தில் 8—12—53ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் கருணாநிதிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. கூட்டத்திற்கு கே. கே. நீலமேகம் தலைமை வகித்தார். தோழர்கள் நாராயணசாமி, வைத்திலிங்கம் ஆகியோர் பேசியபின் தோழர் கருணாநிதி நல்லதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ஆந்திர பிர-சோ. கட்சி

தோழர் தென்னேட்டி ராஜினாமா

விஜயவாடா, டிச. 13—

ஆந்திர பிரஜா - சோஷலிஸ்டு கட்சியின் தலைவர் பதவியை தோழர் தென்னேட்டி விசுவநாதன் ராஜினாமா செய்து விட்டார். அதுபற்றி குறிப்பிட்டு அக்கட்சியின் பொதுச் செயலாளர் பி. வி. ஜி. ராஜுவுக்கு ஒரு கடிதம் கிடைத்துள்ளது.

ஆந்திர பிர-சோ. கட்சி, இப்போது, ஒரு தலைவர் இன்றி இருப்பதாயும். கூடிய சீக்கிரத்தில் தற்காலிக தலைவர் ஒருவர் நியமிக்கப்படக் கூடும் என்றும் தோழர் ராஜு கூறினார்.

சென்னையில் கடற்படை தினம்

சென்னை, டிச. 15—

சென்னையில், 19-ந் தேதி கடற்படை தினம் கொண்டாடப்படவிருக்கிறது. சென்னை கவர்னர் பிரகாசா வைபவத்திற்குத் தலைமை தாங்குவார். கப்பல்களைப் பார்வையிட பொது மக்களுக்கு வசதி செய்யப்படும்; மாணவர்களுக்குக் கடற்படை பற்றிய பிலிம்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் காட்டப்படும்.

1952-53ல், இந்தியாவில் செலவான சர்க்கரையின் மொத்த அளவு 16.7 லட்சம் டன் ஆகும்.

காந்தியார் வளர்த்த காங்கிரசில்......

★

கல் நெஞ்சன்!

"எனக்கு இளகிய மனமே இல்லையானது; நான் ஒரு கல் நெஞ்சனாக இருந்திருக்காவிட்டால், காங்கிரசில் சேர்ந்திருக்க மாட்டேன்; என் மனைவி மக்களைக் கவனித்துக் கொண்டிருப்பேன்."

—கோழிக்கோட்டில் ஆச்சாரியார்.

★

கருமி!

"நான் ஒரு கருமி; ஆகவே, கடவுளுக்குக் கூட உங்களுக்குப் பண உதவி செய்ய முடியாது; வேண்டுமானால் மத்திய சர்க்காரைக் கேட்டுப்பாருங்கள்"

—அன்னபூர்ணா கட்டிடத் திறப்பு விழாவில் நிதி அமைச்சர் சுப்ரமணியம்

'நாத': 13—12—53.

சென்னை சட்ட சபையில் வரவு-செலவுத் திட்டம்

நிதி மந்திரி சுப்பிரமணியம் விளக்கம்

சென்னை, டிச 14—
சென்னை சட்ட சபைக் கூட்டம், இன்று காலை நடைபெற்ற போது 1953—54-ம் ஆண்டு இரண்டாவது பகுதிக்குரிய வரவு—செலவு கணக்கை நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் கொண்டு வந்தார்.

வரவு செலவுத் திட்டப்படி ரு 23 கோடியே 70 லட்சத்து 93 ஆயிரத்தில், ரூ. 23 கோடியே 47 லட்சத்து 64 ஆயிரம் செலவாகும்.

அதிகமாக 23 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் உள்ளது.

நிதி அமைச்சர் வரவு—செலவு திட்டத்தைச் சமர்ப்பித்து பேசுகையில், "நல்ல மழை பெய்துள்ளதால், உணவுப் பொருள் விலைகள் குறைந்து வருகின்றன. பஞ்ச நிவாரண வேலைகளும், சிறிது சிறிதாக நிறுத்தப்படுகின்றன. மேலும், மணலி மூலமும் சென்னைக்கு தண்ணீர் சேரலாம்." என்றும் குறிப்பிட்டார். மேலும் பேசுகையில், "ஹரிஜனங்களுக்கு நன்மை செய்வதற்காக ரூ 11 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்றார்.

அசெம்பிளியில் ஐ. மு. அமையும்?

சென்னை, டிச 15—
கம்யூனிஸ்ட் கட்சி தவிர, 'தேசிய ஜனநாயக முன்னணி' போன்றதை, சென்னை சட்டசபையில் ஏற்படுத்த, முயற்சிகள் நடைபெறுகின்றன. இம்முயற்சி விரைவில் ஈடேறி, புதிய எதிர்க்கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரியவருகிறது.

36 உறுப்பினர்களைக் கொண்ட திராவிட பார்லிமெண்டரி கட்சியும், 17 உறுப்பினரைக் கொண்ட உழைப்பாளர் கட்சியும், 15 உறுப்பினர்களைக் கொண்ட பி. சோ. கட்சியும் சேர்ந்து, புதிய முன்னணி அமைப்பர் என்றும், குறைந்த அளவு திட்டத்தின் கொள்கை மீது சர்க்காருக்கு எதிராக இக்கட்சி வேலை செய்யும் என்றும் கூறப்படுகிறது.

மேல்சபையை நீக்கிவிட பம்பாய் சட்டசபை தீர்மானம்

பம்பாய், டிச 14—
மேல்சபையை நீக்கிவிட வேண்டுமென்று, பம்பாய் சட்டசபையில் இன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தோழியர் ஜகன்மீது வழக்கு

ஜார்ஜ் டவுன், டிச. 13—
அனுமதியின்றி கூட்டம் நடத்தியதாக பிரிட்டிஷ் கயானா மக்கள் கட்சி செயலாளர் தோழியர் ஜெகன் முதலிய 10 பேர் மீது நெருக்கடி கால சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அவர்கள் ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்கள்.

காமராஜர்—ஆச்சாரியார் சந்திப்பு

சென்னை, டிச 14—
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் காமராஜர் டில்லியிலிருந்து நேற்று சென்னை வந்து சேர்ந்தார்.

காலை 10 மணிக்கு காமராஜர் முதல் மந்திரி ஆச்சாரியாரை சந்தித்துப் பேசினார். இவர்கள் இருவரும் சிறிது நேரம் உரையாடினார்கள்.

திரு. வி. க. நூல் நிலைய திறப்பு விழா

பெண்ணாடம், டிச 10—
மேற்படி நூல் நிலையத்தை தோழர் அ. ரத்தினம் திறந்து வைத்தார். தோழர் பி. என். சுப்பிரமணியம் திரு வி. க.-வின் சேவையைப் பற்றியும் நூல் நிலையத்தின் அவசியத்தைப் பற்றியும் பேசினார்.

நாவலர் சவுந்திர பாண்டியனார் படிப்பகம், பகுத்தறிவு மன்றம்

பம்பாய், டிச. 14—
5—12—53ல், தோழர் வெள்ளைத்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாவலர் சவுந்தர பாண்டியனார் அவர்களின் துணைவியார் பாலம்மாள் அம்மையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கழகக் கூட்டம்

★

பேராவூரணி

18—12—53 வெள்ளிக்கிழமை

தலைவர்:
மன்னார்குடி பி. நாராயணசாமி

பேசுவோர்:
மு. கருணாநிதி
என். எஸ். இளங்கோ
மூர்த்தி-சத்தி
அம்பில்-தர்மலிங்கம்

மதியழகனுக்கு பாராட்டுக் கூட்டம்

16—12—53 புதன் மாலை, கணியூரில், தோழர் மதியழகனுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெறும். அன்று மாலை 5 மணிக்கு அழகிரி மன்றத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

காங்கேயம் அர்ச்சுணன் மன்றம்

15—12—53ல், காங்கேயத்தில் அர்ச்சுணன் மன்றத் துவக்க விழா பெருங் கூட்டமாக நடைபெறும். துவக்க விழாவை தோழர் ஈ. வி. கே. சம்பத் துவக்கி வைப்பார். வையத்தில் பலர் கோஷ்டியாக பட்டக்காரர் அவர்களும் கலந்து கொள்வர்.

ஆட்சி மொழி மாநாடு

தமிழிலேயே ஆட்சி நடத்த வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக, 20—12—53 அன்று, சென்னை அண்ணாமலை மன்றத்தில் ஆட்சி மொழி மாநாடு நடைபெறும். மாநாட்டிற்கு, தோழர் ம. கே. செஜபதி அவர்கள் தலைமை தாங்குவார்.

கலை இல்ல நூலக ஆண்டு விழா

தரங்கம்பாடி, டிச 10—
8—12—53ல், தோழர் எஸ். உதுமான் தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெற்றது. செயலாளர் ஆண்டு அறிக்கை வாசித்தார். திரு வி. க. படத்தை தோழர் வீரப்பி திறந்து வைத்தார். தோழர் இராவமையா வும் திறந்து வைத்தனர். தோழர்கள் கலைப்பித்தன், பிருந்தா நதன், கே. பு, காசிராமய்யா, சித்தார்த்தன், பனனீர் செல்வம் ஆகியோர் 'கலையும், தி மு கழகமும்' என்பது பற்றி பேசினார்.

ஈ. வி. கே. சம்பத் சுற்றுப் பயணம்

டிச. 15 ... காங்கேயம்
,, 16 ... அந்தியூர்
,, 20 ... பொள்ளாச்சி

வட ஆர்காடு மாவட்ட கிளைக் கழக செயலாளர்களுக்கு

27—12—53-ந் தேதி மாவட்டத்தின் சார்பில் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் உட்பட ஐவருக்கும் வரவேற்பு வேலூரில் நடைபெற முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய நிதிக்கென ஒவ்வொரு கிளைக் கழகமும் குறைந்தது 50-ம், நகர கிளைகள் 100-ம் மேற்படி நிதிக்கு தந்து உதவுமாறு வேண்டப்படுகிறார்கள். வசூலாகும் தொகையை வரவேற்புக் குழுச் செயலாளரிடம் தரவேண்டியதால் விரைவில் மாவட்டச் செயலாளர் இதற்கென சுற்றுப்பிரயாணம் செய்து வசூலிக்க அவசியம் தருமாறு செயலாளர் ஏ. கே. கருணைசாமி கேட்டுக் கொள்கிறார். சுற்றுப்பிரயாண விவரம் ஒரு வாரத்திற்குள் தெரிவிக்கப்படும்.

32வது வட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்

சென்னை, டிச. 15—
எழும்பூர் 32-வது வட்ட தி.மு. கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம், 19—12—53 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அவ்வமயம் வரவிருக்கும் பொங்கல் விழாவினையும், ஆண்டு விழாவினைப் பற்றியும் யோசிக்க வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு செயலாளர் டி. என். இராஜசேகரன் கேட்டுக்கொள்கிறார்.

எண்ணூர் தி.மா.மு.கழக செயற்குழுக் கூட்டம்

16—12—53 அன்று செயற்குழு கூட்டம் நடைபெறும். அது போது, திராவிடர் திருநாளான பொங்கல் பண்டிகை கொண்டாடுவது பற்றியும், கழகத்தின் முக்கிய வேலைகளைப் பற்றியும் ஆலோசிக்கப்படும். கழகத் தோழர்கள் தவறாமல் அழைப்பாகக் கொண்டு வருமாறு தோழர் சேது கேட்டுக்கொள்ளுகிறார்.

நன்றி

சென்னை 1 வது வட்ட தி. மு. கழகக் கிளைக்காக டாக்டர் வி. எம். முதலையா (217, திருவொற்றியூர் பெரிய சாலை, தண்டையார்பேட்டை) அவர்கள், வாடகை இல்லாமல், இலவசமாக ஒரு இடத்தைப் புதுப்பித்துத் தந்தமைக்காக மேற்படி வட்டத் தோழர்கள் அவருக்கு உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

வள்ளுவர் வாசகசாலை மூன்றாவது ஆண்டுவிழா

16 12 53 புதனன்று மாலை 5 மணிக்கு சென்னை மீர் சாகிப்பேட்டை சைவ முத்தையா முதலி தெருவில் க. சின்னக்கண்ணு தலைமையில் ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, வி. எஸ். கோவிந்தராசன் பேசுவர்.

மாயூரம்

29—11—53-ல், நகர தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், புதிய செயலாளராக தோழர் கே. அருணாசலமும், உதவி செயலாளராக தோழர் எஸ். மீனாட்சி சுந்திரமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டிராம் கம்பெனி கடன்

நீதிபதியின் உறுதிமொழிப் பத்திரம்

சென்னை, டிச. 14—
மின்சாரக் கட்டணம் முதலியவற்றிற்காக டிராம் கம்பெனி 9 லட்ச ரூபாய்க்கு மேல் சர்க்காருக்கு தரவேண்டியதற்காக அந்த தொகை வசூலாகும்வரை சொத்துக்களை விற்பதில்லையென கம்பெனியின் நிர்வாகிகள் எழுத்து மூலமாக நீதிபதி ராமசாமி கவுண்டர் முன்பு இன்று ஒரு பத்திரத்தைத் தாக்கல் செய்தார்.

சட்டசபையில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கும் அதனை கூறினார்; அப்போது, உள்ளூரில் ஏதாவது போட்டா போட்டி இருந்திருக்கலாம்; அதனால், அந்தப் பெயரை அவர்கள் விரும்பியிருக்கலாம்.

"1937-ல், நான் முதன் மந்திரியாய் இருந்தேன்; ரயில்வே நிலையத்திற்கு இந்தப் பெயரை கொடுப்பதற்கு நான் சம்மதித்திருந்தேனா என்று தெரிந்து கொள்வதற்காக, இந்தப் பழைய ரிகார்டுகளை எல்லாம் புரட்டிப் பார்த்தேன்; என்னை யாரும் அந்த விஷயத்தில் யோசனை கேட்கவில்லை; கேட்டிருந்தால், 'டால்மியாபுரம்' என்ற பெயர் வேண்டாம் என்று சொல்லியிருப்பேன். கிராமத்தின் பெயரையே ரயில்வே நிலையத்திற்கும் கொடுத்திருந்தால், இந்தச் சங்கடங்கள் எல்லாம் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம்; ஆனால், 'கள்ளிக்குடி', என்று மற்றொரு ரயில்வே நிலையம் இருக்கிறது; பார்சல்கள், எந்த இடம் என்று தெரியாமல் மாறி, குழப்பம் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்பதற்காகத்தான், ரயில்வே அதிகாரிகள் இப்படிச் செய்ததாகத் தெரிகிறது."

"ரயில்வே நிலையத்திற்கு, ஒரு பெயரைக் கொடுத்தாகி விட்டது; மறுபடியும் அதை மாற்றவேண்டுமென்பது, அனாவசியம் என்பதே என் அபிப்பிராயம்; முதலிலேயே, டால்மியாபுரம் என்ற பெயரை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை; இப்போது அதை மாற்றவேண்டியதும் அவசியமில்லை"

"மேலும் இந்த விஷயத்தில், சென்னை சர்க்கார் செய்யக் கூடியது எதுவுமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்."

சொற்பயில் மன்றம்

கோடம்பாக்கம், டிச. 9—
கலைவளர் கழகம், வ. உ. சி. மன்றம், தி மு கழகம் ஆகியவைகள் சேர்ந்து நடத்தும் "சொல் பயில் மன்றத்"தின் மூன்றாவது கூட்டம் தி மு கழகக் கட்டிடத்தில் 6—12—53ல், தோழர் சா. கணேசன் தலைமையில் நடைபெற்றது. அப்போது 'போராட்டம்' என்னும் தலைப்பில், தோழர்கள் பு. அ. திருநாவுக்கரசு, அருட்செல்வர்மன், என். குப்புசாமி, எஸ். எஸ். சடையப்பன், அ. செ. க. அரைக்கண்ணு, கிருட்டினமூர்த்தி ஆகியோர் பேசினர்.

திருச்சி வானொலியில்.....

19—12—53 சனி இரவு 7-45 மணிக்கு 'திருக்குறள் கூறுகிற கல்வி' என்பது பற்றி தோழர் இளமுருகு-பொற்செல்வி பேசுவார்.

1954ம் ஆண்டு காலண்டர்
11X5 அளவில்
இரண்டு கலர்களில்
மாதம் கிழிக்கும் சிலிப்புடன்
1 பெரியார் ஈ.வெ.ரா.
2 அறிஞர் அண்ணா
3 கலைஞர் கருணாநிதி
4 இரா. நெடுஞ்செழியன்
5 ஈ.வெ.கி. சம்பத்
6 கே. ஏ. மதியழகன்
7 என். வி. நடராசன்
8 சி. பி. சிற்றரசு
9 கே. ஆர். ராமசாமி
10 எம். ஜி. ராமச்சந்திரன்
11 சிவாஜி கணேசன்
12 எம். ஆர். ராதா
13 டி. வி. நாராயணசாமி
14 எஸ். எஸ். இராஜேந்திரன்
15 கவிஞர் பாரதிதாசன்
16 தமிழ்த்தென்றல் திரு. வி. க.
17 மறைமலை அடிகள்
18 இராவணன் உருவில் அண்ணா
19 பேரறிஞர் சாக்ரடீஸ்
20 திருவள்ளுவர்
விற்பனைக்கழிவு 25% சிலவு இணும்
மேற்படி 20 ரக காலண்டர்கள்
சேர்ந்து ரூ-3/-M.O. செய்யவும்
ஒரு காலண்டர் விலை 0-2-6
புகழ்வள்ளி பாசறை
[illegible] ஆச்சாரி தெரு.
சென்னை 5.

இலங்கையில் மேற்படி காலண்டர்கள் கீழ்கண்டவரிடம் கிடைக்கும்
G. ராமசாமி, தமிழ்ப் பண்ணை,
யாழ்ப்பாணம், சிலோன்.

பாலதண்டாயுதம் பட்டினிப்போர்

சென்னை, டிச. 13—
பொதுவுடமைக் கட்சித் தோழர்கள் பாலதண்டாயுதம் உட்பட 7 தோழர் சென்ற 10-ந் தேதி முதல் மதுரை சிறையில் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் அரசியல் கைதிகளாக நடத்தப்பட அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அதில் சதி வழக்கு கைதிகளை சர்க்கார் வாபஸ் பெற வேண்டுமெனக் கோரியுள்ளனராம்.

'தினத்தந்தி' ஆசிரியர் மீது வழக்கு

சென்னை, டிச. 14—
கோர்ட்டை அவமதித்ததாக 'தினத்தந்தி' ஆசிரியர், பதிப்பாளர், பிரசுரகர்த்தரான பி. ராமரத்தினம் மீது முன்னாள் மந்திரி எஸ் இராமநாதன் தொடர்ந்த வழக்கு விசாரணை ஜன. 4-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்மனுதார் ராமரத்தினம் வக்கீலில்லாதபடியால், கோர்ட்டில் 'சார்பு' செய்யவில்லை. நீதிபதிகள் புதிதாக கோர்ட்டில் பிறப்பிக்கும்படி சொல்லி வழக்கை ஒத்திப் போட்டனர்.

சென்னை மதுவிலக்கு மந்திரி 'தினத்தந்தி' நிருபருக்கு அளித்த பேட்டியை, அப்பத்திரிகை 24—11—53-ந் தேதி இதழில் பிரசுரித்ததாகவும், மதுவிலக்கு வழக்குகள் பல விசாரணையில் இருக்கும்போது அதை பிரசுரித்தது கோர்ட்டை அவமதித்ததாகும் என்று மனுதார் தரப்பில் கூறப்பட்டது.

இந்த வழக்கு சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதிபதிகள் சத்திய நாராயணராவ், பி. ராஜகோபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இ. தே. தோ. ச. கா. தற்காலிக செயலாளர்

புதுடெல்லி, டிச. 14—
நாகபுரி விமான விபத்தில் மாண்ட அரிகாநாத் சாஸ்திரிக்குப் பதில் கே. பி. திருபாதி, எம். பி, இ தே தொழிற்சங்கக் காங்கிரஸின் தற்காலிக செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, [illegible] செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, [illegible]